# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 159/ந/2024
நாள்:.28 .05.2025

திரு. அ. சசிகுமார்,
Ms. அ. கல்பனாதேவி, திருவள்ளூர் மாவட்டம். ... முறையீட்டு மனுதாரர்கள்

ஆணையாளர், ... எதிர்மனுதாரர்
திருவள்ளூர் நகராட்சி, திருவள்ளூர் மாவட்டம்.

திருவள்ளூர் மாவட்டம், லஷ்மிபுரம் தெரு, கதவு எண். 34 என்ற முகவரியை சேர்ந்த திரு. அ. சசிகுமார் மற்றும் Ms. அ. கல்பனாதேவி ஆகியோரது 24.09.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.09.2024 அன்று பெறப்பட்டு, 159/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர்களின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருவள்ளூர் மாவட்டம், லஷ்மிபுரம் தெரு, கதவு எண். 34 என்ற முகவரியை சேர்ந்த திரு. அ. சசிகுமார் மற்றும் Ms. அ. கல்பனாதேவி ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு புகார்களை தெரிவித்துள்ளார்கள்:-

"எங்களது வீட்டு பக்கத்தில் சர்வே எண்கள்.18, 19, 20 & 21–ல் 2.35 ஏக்கர் கொண்ட இடத்தில் P dot G என்னும் கட்டுமான நிறுவனம் அடுக்குமாடி குடியிருப்பு கட்டி வருகின்றனர். P dot G நிறுவனர் Insolvency (IP) கொடுத்து சென்றுவிட்டார். தற்போது RCC-e Construction Pvt. Ltd. என்னும் கட்டுமான நிறுவனம் கட்டுமான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த இடத்திற்கு முறையான DTCP Approval பெறாமல் கட்டி வருகின்றனர். இதற்கு ஆதாரமாக RTI ரிப்போர்ட் பெற்றுள்ளோம். இது தொடர்பாக, நகராட்சி ஆணையர், நகர்மன்ற தலைவர் மற்றும் வார்டு கவுன்சிலரிடமும் புகார் அளித்துள்ளோம். ஆனால் அவர்கள் யாரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பிறகு மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்தோம். அதற்கு நகராட்சி தரப்பில் இருந்து பதில் அளிக்கப்பட்டது. அதில் 260 குடியிருப்புகளுக்கு நகராட்சி கட்டிட அனுமதி வழங்கியுள்ளதாக கூறியுள்ளனர். மனைப் பிரிவுக்கே DTCP இல்லாத பொழுது நகராட்சி எவ்வாறு கட்டிட அனுமதி வழங்கியது என்பது புரியவில்லை. இதற்கு அவர்கள் பெற்றுக் கொண்ட லஞ்சம் எவ்வளவு என்பதும் தெரியவில்லை.

இந்த இடத்திற்கு 1996 ஆம் ஆண்டே மனைப் பிரிவுகள் போடப்பட்டுள்ளது. இரண்டு மனைகளும் விற்கப்பட்டுள்ளது (Plot No.13, 14) இதற்கு ஆதாரமாக Plot Layout இணைத்துள்ளோம். அந்த மனைப் பிரிவு திட்டப்படத்தில் காட்டப்பட்டுள்ள 30 அடி வழியின் குறுக்கே P dot G நிறுவனம் கட்டிடம் கட்டியுள்ளனர். அதை அகற்ற செய்ய கோரியும் ஆட்சியரிடம் மனு அளித்தோம். அதற்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது அதே வழியின் குறுக்கே பூங்கா (Park) அமைக்கும் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கட்டிடத்திற்கு காட்டப்பட்டுள்ள 30 அடி வழியானது 2013–ஆம் ஆண்டு மார்ச் 11–ஆம் தேதி அன்று தான் நகராட்சிக்கு P dot G நிறுவனர் தானம் செய்துள்ளார். தானம் செய்து ஒரே வாரத்தில் நகராட்சி கட்டிட அனுமதி வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

உண்மையில், இந்த 30 அடி (5 செண்ட்) வழி கொண்ட இடம் எங்களுடைய பட்டா இடம். நாங்கள் இதை யாருக்கும் விற்கவும் இல்லை, தானமாக கொடுக்கவும் இல்லை. ஆனால், P dot G நிறுவனர் இந்த வழியை நகராட்சிக்கு தானம் கொடுத்துவிட்டார். 2018–ஆம் ஆண்டு பட்டா மாற்றமும் செய்துள்ளார். இந்த Gift Deed ஆவணத்தை ரத்து செய்யக்கோரியும் மோசடி பட்டாவை ரத்து செய்யக்கோரியும் ஆட்சியரிடம் மனு அளித்துள்ளோம். அதற்கும் எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை.

ஆக இந்த 30 அடி வழியில் தான் நகராட்சி முறைகேடு செய்துள்ளது. ஏனென்றால், மனைப்பிரிவுக்கு காட்டப்பட்ட 30 அடி வழி வேறு, கட்டிடத்திற்கு காட்டப்பட்ட 30 அடி வழி வேறு. வழியை மறைத்து நகராட்சி 11 வருடமாக ஊழல் செய்துள்ளது என்பது நிதர்சனமான உண்மை.

எனவே, இதை தாங்கள் விசாரணை மேற்கொண்டு, ஆராய்ந்து முறைகேடு மற்றும் ஊழல் செய்துள்ள நகராட்சியின் மீது நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்" என கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.09.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருவள்ளூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3) திருவள்ளூர் நகராட்சி ஆணையர் தனது 02.01.2025 நாளிட்ட கடித எண். 2793/2024/எப்1 –ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"1. The application by the complainants dated 24.09.2024 is an anonymous complaint made against Thiruvallur Municipality.

2. This respondent is irrelevant to the complaint. On assumption and presumption, this complaint has been filed. Actually, this complaint would have been given to Police or the Department of Anti-Corruption or Vigilance Department. If there is any technical fault on the part of this respondent personally for the complainants or if there is any deficiency in service then complaints

may be filed before this forum. Absolutely this complaint is unsustainable in law.

3. This respondent submits that originally the complainant's father Mr. G. Anbanandhan S/o. Ganesh Mudaliar filed the suit for declaration of his right for 7 cents in Survey No.21 of Periyakuppam Village. Actually the said suit in O.S.No.9 of 2015 was filed for recovery of possession as against P Dot G Construction Private Limited in the year 2015. After the demise of Anbanandhan, the complainants were impleaded themselves as plaintiffs in the suit. Further, the suit is also for recovery of possession with regard to 7 Cents out of 1.47 Acres. Hence, it is clear that they are claiming the right only for 7 Cents and not anymore and also they filed the suit stating that M/s. P Dot G Construction Private Limited encroach their area. Originally the complainants have suppressed the fact that a civil suit is pending on the file of Additional District Judge No.1 at Thiruvallur. For the suppression of material fact the complaint has to be dismissed.

4. The respondent submits that originally an extent of 1.47 Acres in Survey No.21 belongs to the family of Mr.Ganesa Mudaliar. After the demise of Mr. Ganesa Mudaliar his wife Smt. Sarojini Ammal, his sons namely Mr. Anbanandhan, Mr.Ramadoss and his daughters Smt. Kalyani and Smt. Anusiya entered into registered Partition Deed on 11.11.1991. In the registered Partition Deed an extent of 0.31 acre out of 1.47 acre in Survey No.21 was allotted to Mr.Anbanandhan. The complainants Mr. Sasikumr and Ms. Kalpana Devi are the son and daughter of Mr.Anbanandhan. After the allotment each were in the separate possession and as absolute owner alienated the property along with his brother Mr. Ramadoss.

5. This respondent submits that on 30.05.1995 Mr.Anbanandhan and Mr. Ramadoss appointed one Mr.N.S.Babu as their Power agent for 2.47 acres including the Survey No.21. Again on 02.09.2005 Mr.G.Anbanandhan and Mr.G.Ramadoss appointed Mr. T.Govindarajan as their Power agent for 1.25 acre in Survey No.21.

6. The respondent submits that as lawful Power agent Mr. T.Govindarajan on behalf of Mr.G. Anbanandhan and Mr.G.Ramadoss alienated an extent of 0.47 acre in Survey No.21 to Mr. Seshathri on 12.09.2005. On the same day (i.e., on 12.09.2005), the Power agent Mr. Govindarajan sold an extent of 0.60 acre in Survey No.21 to Mr.Sadhasivam. The another Power agent of Mr. G.Anbanandhan, Mr.Ramadoss and Mr.N.S. Babu sold

Plot No.13 and Plot No.14 in Survey Numbers 18 and 21 to Mr. G.Rajendiran on 30.04.1996.

7. The respondent submits that Mr. G.Anbanandhan and Mr.G. Ramadoss cancelled the Power of Attorney in favour of and Mr.N.S.Babu on 10.03.1997 leaving the Plot No.13 and Plot No.14. Hence, Mr. G.Anbanandhan accepted the alienation of Plot No.13 and Plot No.14. Subsequently, the purchasers of the property namely Mr.Seshathri, Mr.Viswanathan, Mr.Sadhasivam, Smt.Nagamani, Smt. Geetha Anandakumar and Mr. Pandian appointed M/s. Praneel Developers Private Limited as their Power of Attorney on 01.10.2012. Subsequently, M/s. Praneel Developers Private Limited alienated the total extent of 2.47 acres to P Dot G Construction Private Limited, represented by Mr.P.G.Prabhakar Reddy on 25.10.2012 vide Document No.14564/2012 on the file of SRO, Thiruvallur. There are so many alienations by Mr.G.Anbanandhan along with his son and daughter to various 3rd parties. Hence, the Sale deed executed by Mr.G.Anbanandhan, Mr. Sasikumar, Smt. Renuka Devi, Ms. Kalpana Devi and Mr. Rajkumar are binding on the complainants. But, deliberately they filed complaint before this forum by making defamatory allegation as against this respondent.

8. This respondent submits that it is unfortunate to receive such a complaint by having recitals, "இதற்கு அவர்கள் பெற்றுக் கொண்ட லஞ்சம் எவ்வளவு என்பதும் தெரியவில்லை". In Page No.3, it has been stated as வழியை மறைத்து நகராட்சி 11 வருட ஊழல் செய்துள்ளது". Hence, the recitals in the complaint are absolutely mud throwing allegation as against this respondent. The complainants are the land grabbers who want to get back the property which was alienated by their father along with complainants. The above said facts have been entirely suppressed by the complainants. The sale made by Mr.G.Anbanandhan bind on the complainants. There is no property remaining for the complainants as per alienation made by the complainants and their father.

9. This respondent submits that after purchase in the year 2012 the M/s. P Dot G Construction Private Limited applied for approval before the DTCP Department. The DTCP Department accorded sanction for the construction of 260 houses in the properties purchased by M/s. P Dot G Construction Private Limited on 19.03.2013. Therefore, it is not the Thiruvallur Municipality who accorded permission for construction of houses. Thiruvallur Municipality is supervising the construction and entitled to get the Gift deed with regard to Public Places. On that basis on 18.03.2013 itself M/s. P Dot G Construction Private Limited gave Gift Deed in favour of this respondent vide Document

No.3312/2013. Hence, It is crystal clear that the same Anbanandhan and the complaints jointly plotted out and alienated several plots to several 3rd parties. All the purchasers have jointly alienated the property in Survey No.21 to M/s. P Dot G Construction Private Limited. Hence, there is no single traverse by this respondent officially or unofficially. Actually, the complainants had filed the application before this forum only to tarnish the name of the Thiruvallur Municipality who are acting legally on the guidance of the Commissioner, Tamilnadu Local Body and as per the norms of Department of Town and Country Planning. Further, as per the District Municipality Act, this respondent after getting Gift deed measured the property and allowed the M/s. P Dot G Construction Private Limited to raise construction. The allegation with regard to receiving bribe as alleged by the complainants is to be proved by them only. As stated above the complaint is an anonymous one and not much of importance shall be given to the anonymous petition who is making false allegation as against the Public Officer.

10. This respondent submits that the complainants have no iota of property in Survey No.21 which was fully alienated by Mr.Anbanadhan and the complainants. Wantonly and deliberately they filed this complaint before this forum making allegation as against the Officer who is acting on good faith. The complaint is devoid of merits and it is not sustainable before this forum.

Therefore, it is prayed that this Hon'ble Forum may be pleased to Reject the complaint stating that it is anonymous complaint" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரான திருவள்ளூர் நகராட்சி ஆணையரை 17.03.2025 அன்று நடைபெற உள்ள விசாரணையில் ஆஜராகும்படி இம்முறை மன்ற நடுவத்தின் 10.03.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர்கள் திரு. அ. சசிகுமார் மற்றும் Ms. அ. கல்பனாதேவி ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்தில் 17.03.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

"எங்களது வீட்டுப் பக்கத்தில் சர்வே எண்கள்.18,19,20 & 21–ல், 2.25 ஏக்கர் கொண்ட இடம் எங்களது தந்தையார் திரு.அன்பானந்தன் அவர்களால் கிரையம் வழங்கப்பட்டது. மேற்கண்ட இடத்திற்கு வழியாக 30 அடி எனது தந்தையாரால் எல்லை விவரமாக காண்பிக்கப்பட்டது. கிரையம் செய்யப்படவில்லை.

இந்த 30 அடி வழியை நகராட்சிக்கு 2013–ம் ஆண்டு P Dot G நிறுவனத்தார் தானம் செய்துள்ளனர்.

விற்பனை செய்யப்பட்ட இடத்தில், முறையான DTCP approval இல்லாமல் 260 கட்டிடங்கள் கட்டுவதற்கு நகராட்சி கட்டிட அனுமதி வழங்கியுள்ளது.

P Dot G நிறுவனத்தாரால் 11.03.2013ல் தானப்பத்திரம் நகராட்சிக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் 06.02.2013–ல் DTCP approval அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து நகராட்சி விளக்கம் அளிக்க வேண்டும்.

2.25 ஏக்கர் கொண்ட இடத்தை மட்டுமே நாங்கள் கிரையம் செய்து கொடுத்துள்ளோம். ஆனால் 2.35 ஏக்கர் நிலத்தில் கட்டிடம் கட்ட நகராட்சியால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனை நகராட்சி விளக்க வேண்டும்.

மேற்படி விவரங்களை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்து, மேற்படி எங்களது இடம் தொடர்பான விசாரணை மேற்கொண்டு நகராட்சியின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

6) எதிர்மனுதாரரான திருவள்ளூர் நகராட்சி ஆணையர் தனது 14.03.2025 நாளிட்ட கடிதத்தில் திருவேற்காடு நகராட்சி ஆணையராக பணிபுரிந்து வரும் தான் திருவள்ளூர் நகராட்சி ஆணையர் கூடுதல் பொறுப்பாக பணிபுரிந்து வருவதாகவும், சட்டமன்ற கூட்டத் தொடர் நடைபெற்று வருவதால், சட்டமன்ற வினாக்கள் மற்றும் வெட்டு தீர்மானம் ஆகியவைகளுக்கு உடனுக்குடன் அறிக்கை அனுப்ப வேண்டி உள்ளதாலும், 2024–25 நிதியாண்டு நிறைவடைய உள்ளதால், வரிவசூல் பணி உள்ளதாலும், 17.03.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்துக்கொள்ள திருவள்ளூர் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திருமதி பெ. விஜயா என்பவரை அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளதைத் தொடர்ந்து, 17.03.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் திருவள்ளூர் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திருமதி பெ. விஜயா என்பவர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் அளித்துள்ளார்.

“P Dot G நிறுவனம் 11.03.2013–ல் தானம் கொடுத்துள்ள இடத்திற்கு முறையாக DTCP approval 19.03.2013–ல் அளிக்கப்பட்டுள்ளது.

DTCP ஒப்புதலின்படி நகராட்சி நிர்வாகத்தால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் புகார் தொடர்பாக மனுதாரர் DVAC- யிடம் அளிக்கப்பட்ட, புகார் தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்யப்பட்டு அறிக்கை கோரப்பட்டுள்ளது.

மனுதாரர் கோரியுள்ள விளக்கத்தினை அளிக்க கால அவகாசம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7) எதிர்மனுதாரரான திருவள்ளூர் நகராட்சி ஆணையர் சார்பில் ஆஜரான திருவள்ளூர் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர், மனுதாரர் கோரியுள்ள விளக்கத்தினை அளிக்க கால அவகாசம் வழங்க கோரியதாலும், இப்பொருள் தொடர்பாக மேலும் சில விவரங்கள் தேவைப்படுவதாக இம்முறைமன்றம் கருதி மனுதரார்களையும், எதிர்மனுதாரரான திருவள்ளூர் நகராட்சி ஆணையரையும், புகாரில் தொடர்புடைய M/s. RCC-e Construction Pvt. Ltd., நிறுவனத்தினரையும் 29.04.2025 அன்று நடைபெற உள்ள விசாரணையில் ஆஜராகும்படி இம்முறை மன்ற நடுவத்தின் 23.04.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

8) மனுதாரர்கள் திரு. அ. சசிகுமார் மற்றும் Ms. அ. கல்பனாதேவி ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்தில் 29.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளனர்.

“எங்களது வீட்டுப்பக்கத்தில் சர்வே எண்கள்.18,19,20 & 21–ல், 2.25 ஏக்கர் கொண்ட இடம் எங்களது தந்தையார் காலஞ்சென்ற திரு.அன்பானந்தன் என்பவரால் கிரையம் செய்து வழங்கப்பட்டது. மேற்கண்ட இடத்திற்கான 30 அடி வழி எங்களது தந்தையால் எல்லை விவரமாக காண்பிக்கப்பட்டதே தவிர இதனை கிரையம் செய்யவில்லை. ஆனால் இந்த 30 அடி வழியை நகராட்சிக்கு 2013–ம் ஆண்டு P Dot G நிறுவனத்தார் மோசடி தானம் செய்துள்ளனர்.

இக்கட்டிட உரிமையாளருக்கு DTCP approval இல்லாமல் நகராட்சி கட்டிட அனுமதி வழங்கியுள்ளது. 2005–ஆம் ஆண்டு, 2.25 ஏக்கர் கொண்ட இடத்தை மட்டுமே நாங்கள் கிரையம் செய்து கொடுத்துள்ள நிலையில், 2013–ஆம் ஆண்டு 2.35 ஏக்கர் நிலத்தில் கட்டிடம் கட்ட நகராட்சியால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

30 அடி இடத்திற்கு 2018–ஆம் ஆண்டு மோசடி பட்டா மாற்றம் P Dot G நிறுவனம் செய்துள்ளது. இதை ரத்து செய்யக்கோரி விண்ணப்பிக்கப்பட்டு நிலுவையில் உள்ளது.

மேலும் 12 வருட மோசடி பத்திரப்பதிவு தொடர்பான மனுவும் நிலுவையில் உள்ளது.

மேலும் மேற்கண்ட இடத்தில் சட்ட விரோதமாக மின்மாற்றி (EB transformer) அமைக்கப்பட்டுள்ளது. இதை அகற்றம் செய்யக் கோரியும் மனு அளித்துள்ளோம்.

1996–ஆம் ஆண்டு இரு மனைப்பிரிவுகள் இந்த இடத்திற்குபோடப்பட்டுள்ளது. இரண்டு மனைகளும் விற்கப்பட்டுள்ளது. அந்த மனைப்பிரிவிற்கு காட்டப்பட்டுள்ள 30 அடி வழியின் குறுக்கே P Dot G நிறுவனம் கட்டிடம் கட்டியுள்ளது. அதே வழியின் குறுக்கே பூங்காவும் அமைத்துள்ளது. அந்த கட்டிடத்தை அகற்றம் செய்யக்கோரியும், பூங்கா அமைக்கும் பணியை தடை செய்யகோரியும் மனு அளித்துள்ளோம். அதுவும் நிலுவையில் உள்ளது. இந் நேர்வில் எங்களுக்குரிய பரிகாரம் கிடைத்திட ஆவண செய்யுமாறு தங்களை பணிந்து வேண்டி கேட்டுக்கொள்கிறோம்” என தெரிவித்துள்ளனர்.

9) எதிர்மனுதாரரான திருவள்ளூர் நகராட்சி ஆணையர் தனது 28.04.2025 நாளிட்ட கடித எண். 4792/2012/எப்1 –ல் திருவேற்காடு நகராட்சி ஆணையரின் பணியும் கவனித்து வருவதாகவும், திருவேற்காடு நகராட்சியில் நகரமன்றம் கூட்டம் நடைபெற உள்ளதாலும், கூவம் ஆறு சீரமைப்பு அறக்கட்டளை ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளதாலும், 29.04.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் கலந்துக்கொள்ள திருவள்ளூர் நகராட்சி நகராமைப்பு ஆய்வாளர் திருமதி பெ. விஜயா என்பவரை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, 29.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் திருவள்ளூர் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திருமதி பெ. விஜயா என்பவர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

“மனுதாரரால் புகாராக தெரிவிக்கப்பட்டுள்ள இடத்திற்கான DTCP ஒப்புதலுக்கான வரைபடம் இன்று நடைபெற்ற விசாரணையின் போது இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (2.35 – 2.25 = 10 சென்ட் பரப்பளவு காண்பிக்கப்பட்டுள்ளது.)

DTCP ஒப்புதலுக்கான வரைபடத்திற்கான கிரைய ஆவணத்தில் 2.35 ஏக்கர் பரப்பளவு உள்ளதை காண்பிக்கப்பட்டுள்ளது. எனவே இப்புகார் மனுவினை தள்ளுபடி செய்யுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளனர்.

10) புகாருக்குள்ளான M/s. RCC-e Construction Pvt. Ltd., நிறுவனத்தின் பொது மேலாளர் திரு. சண்முகசுந்தரம் மற்றும் திரு. கார்த்திகேயன் ஆகியோர் 29.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்துக்கொண்டு தங்களது வாக்கு மூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள நிலத்தை புகார்தாரரின் தந்தை காலஞ்சென்ற திரு.அன்பானந்தம் மற்றும் அவரது சகோதரர் திரு.ராமதாஸ் மற்றும் அவர்களின் வாரிசுகள் 2.35 ஏக்கர் நிலத்தை பல்வேறு ஐந்து நபர்களுக்கு Sale Deed மூலம் விற்று விட்டனர். மேற்கூறிய ஐந்து நபர்களிடமிருந்து எங்களது நிறுவனத்திற்கு கிரையப்பத்திரம் Sale Deed No.14564/2012 மூலம் கிரையம் பெற்றுள்ளனர். மேற்படி 2 Acres 35 Cents நிலத்தை வாங்கி DTCP திருவள்ளூர் நகராட்சியின் அனுமதி பெற்று M/s.P Dot G Sunshine என்ற பெயரில் அடுக்கு குடியிருப்பு கட்டி விற்கப்பட்டது.

மேற்படி நிறுவனம் 2019–ஆம் ஆண்டு திவால் ஆனதாக நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது. பொதுமக்கள் பலர் குடியிருப்புகள் வாங்கியுள்ளதால் பொதுமக்கள் நலன் கருதி M/s.P Dot G Constructions Pvt. Ltd. நிறுவனத்தின் சொத்துக்களை பொது ஏலம் விடப்பட்டது. ஏலத்தில் M/s.P Dot G Constructions Pvt. Ltd. நிறுவனத்தின் சொத்துக்களை M/s.RCC e-constructions Pvt. Ltd. நிறுவனம் நீதிமன்ற உத்தரவுப்படி குடியிருப்புகளை கட்டி ஒப்படைத்துக் கொண்டிருக்கிறது.

மேற்படி இடம் தொடர்பாக மாண்பமை நீதிமன்றத்தால் அறிவுறுத்தப்பட்டவாறு மேற்படி இடத்தை அளவீடு செய்யும் பொருட்டு Advocate Commissioner மூலம் அளவீடு செய்து தரக்கோரியும், மனுதாரர்கள் முன்வரவில்லை. மனுதாரர்கள் இது குறித்து மாவட்ட ஆட்சியரிடம் அளிக்கப்பட்ட புகார் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தார் எங்கள் நிறுவனத்தின் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்தும், குடியிருப்புவாசிகளையும் எங்களையும் மிரட்டி பொய்யான புகார்களை அளித்து வருகின்றனர் என்பதை இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் புகார்தாரர்கள் எங்கள் நிறுவனம் மீது O.S. No. 9/2015 என்ற வழக்கு திருவள்ளூர் மாவட்ட முதன்மை நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அவ்வழக்கு நிலுவையில் உள்ளது. அவ்வழக்கில் நீதிமன்றம் புகார்தாரர்களை எந்த தகராறிலும் ஈடுபடக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை பணிவோடு இம்முறை மன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளனர்.

11) புகாருக்குள்ளான M/s. RCC-e Construction Pvt. Ltd., நிறுவனத்தின் பொது மேலாளரின் 29.04.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்காணும் விவரங்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

" 1. திருவள்ளூர் மாவட்டம் புல எண்.18, 19, 20, 21 அடங்கிய மொத்த 2.35 Acres நிலம் எங்கள் M/s. P dot G Constructions Private Limited-க்கு சொந்தமானது (தற்போது RCC e-Construct Private Limited).

2. மேற்கூறிய நிலத்தை காலம் சென்ற திரு.அன்பானந்தம் (புகார்தாரரின் தந்தை) மற்றும் திரு. அன்பானந்தத்தின் சகோதரர் திரு. ராமதாஸ் மற்றும் அவர்களின் வாரிசுகள் ஆகியோர் கீழ் உள்ளவர்களுக்கு Sale Deed மூலம் விற்றுவிட்டனர்.

I. Sale Deed No.7637/2005 மூலம் புல எண்.18ல் = 37 Cent நிலத்தை திரு நாகமணி என்பவருக்கு விற்றுவிட்டனர்.

II. Sale Deed No.7488/2005 மூலம் புல எண்.21ல் Part = 47 Cent நிலத்தை திரு.சேஷத்திரி என்பவருக்கு விற்றுவிட்டனர்

III. Sale Deed No.7489/2005 மூலம் புல எண்.21ல் Part= 60 Cent நிலத்தை திரு.சதாசிவம் என்பவருக்கு விற்றுவிட்டனர்.

IV. Sale Deed No.7274/2005 மூலம் புல எண்.19 = 29 Cent நிலத்தை திரு.விஸ்வநாதன் என்பவருக்கு விற்றுவிட்டனர்.

V. Sale Deed No.7275/2005 மூலம் புல எண்.20 = 52 Cent நிலத்தை திருமதி கீதா என்பவருக்கு விற்றுவிட்டனர்.

VI. Sale Deed No.8591/2008 மூலம் புல என்.18 Part & 21 Part = 10 Cent நிலத்தை திரு.பாண்டியன் என்பவருக்கு விற்றுவிட்டனர்.

3. மேற்கூறிய மொத்தம் 2.35 Acre நிலங்களை மேற்கூறிய (I to VI) நபர்கள் மூலம் எங்கள் நிறுவனம் M/s. P Dot G Constructions Private Limited கிரைய பத்திரம் (Sale Deed No.14564/2012 மூலம் = 2.35 Acres Cent நிலத்தை வாங்கி DTCP மற்றும் திருவள்ளூர் முனிசிபாலிடி அனுமதி பெற்று M/s. P Dot G Sunshine என்ற பெயரில் அடுக்கு குடியிருப்பு கட்டி விற்று விட்டோம்.

4. மேற்கூறிய M/s. P Dot G Constructions Private Limited 2019–ல் திவால் சட்டத்தின் படி நீதிமன்றத்தால் திவால் ஆனதாக தீர்ப்பளிக்கப்பட்டது. நீதிமன்றம் பொதுமக்கள் பலர் அந்த நிறுவனத்தில் இருந்து வீடுகள் வாங்கியுள்ளதால் பொதுமக்கள் நலன் கருதி நீதிமன்றம் மேற்கூறிய M/s. P Dot G Constructions Private Limited சொத்துக்களை பொது ஏலம் விட்டது. M/s. RCC e-Construct Private Limited அந்த பொது ஏலம் மூலம் M/s. P Dot G Constructions Private Limited–ஐ கையகப்படுத்தி குடியிருப்புகளை நீதிமன்ற உத்தரவுப்படி கட்டி ஒப்படைத்து கொண்டிருக்கிறது.

5. மேற்கூறிய M/s. P Dot G Constructions Private Limited நிறுவனத்தை மிரட்டி பணம் பறிக்கும் நோக்கோடு நீதிமன்றத்தில் Ms. கல்பனாதேவி மற்றும் அவர்களின் குடும்பத்தார் O.S.No.9/2015 ல் வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது. 2020–ம் ஆண்டு அளக்கும் போது அவர்கள் கூறிய 7 சென்ட் நிலம் இல்லை என்று கூறியதால் பாதியிலேயே பிரச்சனை செய்துவிட்டு சென்று விட்டனர். மேலும் பல முறை நீதிமன்றம் அவர்கள் கூறிய 7 சென்ட் நிலம் உள்ளதா என்று (Advocate Commissioner) மூலம் அளக்கக்கூறியும் அவர்கள் முன்வரவில்லை. மேற்கூறிய வழக்கிலும் நீதிமன்றம், இவர்கள் எந்த தகராறும் செய்ய கூடாது என்று Undertaking தர ஆணை பிறப்பித்தது. அதன்படி

Ms. கல்பனாதேவி மற்றும் அவர்களின் குடும்பத்தார் நீதிமன்றத்தில் ஆஜராகி கையெழுத்திட்டு undertaking கொடுத்தனர்.

6. ஏற்கெனவே மாவட்ட ஆட்சியரிடம் Ms. கல்பனாதேவி புகார் மனு கொடுத்துள்ளார். அம்மனு மீது வட்டாட்சியர் எங்களை 07.12.2023 அன்று விசாரித்து Ms. கல்பனாதேவி, அளித்த புகார் மனு பொய்புகார் என தள்ளுபடி செய்துவிட்டனர். மேலும் வருவாய் கோட்டாட்சியரிடம் 2024–ல் புகார் கொடுத்தனர். அவர்களும் விசாரித்துவிட்டு Ms. கல்பனாதேவி அளித்த புகார் மனு பொய்புகார் என்பது நிருபணமானதால் அவர்களை பொய் புகார் கொடுத்தமைக்காக எச்சரித்து அனுப்பினார்.

7. பலமுறை Ms. கல்பனாதேவி மற்றும் அவர்களின் குடும்பத்தார் காவல் நிலையத்தில் எங்கள் நிறுவனம் மீது அளித்த புகார் நிலுவையில் உள்ளது. Ms. கல்பனாதேவி மற்றும் அவர்களின் குடும்பத்தார் எங்கள் நிறுவனத்தையும் மற்றும் குடியிருப்பு வாசிகளையும் மிரட்டி பணம் பறிக்க பொய்யான புகார் தந்துள்ளார். எனவே தயவு செய்து வழக்கு நிலுவையில் உள்ள பொழுது உள்நோக்கத்தோடு அவர்கள் கொடுத்த புகார் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி கேட்டு கொள்கிறோம்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

12) மனுதாரர்களின் புகார் மனு, வாக்குமூலங்கள், எதிர்மனுதாரர் திருவள்ளூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் அவரது சார்பில் ஆஜரான நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலங்கள், புகாருக்கு உள்ளான M/s. RCC-e Construction Pvt. Ltd., நிறுவனத்தினரின் வாக்குமூலம், அவர்களது கடிதம் மற்றும் இதர ஆவணங்கள்அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

இந்நேர்வில், புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண். 21–ல் ஏழு சென்டின் உரிமை கோரி மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தினர் M/s. P Dot G Constructions Private Limited நிறுவனத்தின் மீது திருவள்ளூர் மாவட்ட முதன்மை நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண். O.S.No.9/2015 நிலுவையில் உள்ள விவரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் M/s. RCC-e Construction Pvt. Ltd., நிறுவனத்தின் கடிதம் மற்றும் அந்நிறுவனத்தின் சார்பில் ஆஜரான திரு. சண்முகசுந்தரம் மற்றும் திரு கார்த்திகேயன் ஆகியோர் சமர்ப்பித்த வாக்கு மூலம் மற்றும் ஆவணங்களின் வாயிலாக தெரியவருகிறது.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (b) – ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

Sec. 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to.-

(a) xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court.

எனவே, மேற்காணும் சூழ்நிலையில், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என்பதால், இப்பொருள் தொடர்பான

மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, மே திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. அ. சசிகுமார்
மற்றும் Ms. அ. கல்பனாதேவி
கதவு எண். 34, லஷ்மிபுரம் தெரு,
திருவள்ளூர் மாவட்டம் 602 001.

2) ஆணையாளர்,
திருவள்ளூர் நகராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.

3) திரு. சண்முகசுந்தரம்,
பொது மேலாளர்,
M/s. RCC-e Construction Pvt. Ltd.,
எண். 66, 3வது மெயின் ரோடு,
கஸ்தூரிபா நகர், அடையாறு, சென்னை – 600 020.

4) நகராட்சிகளின் இயக்குநர்,
நகராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

29/5/25
செயலாளர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032